இணைந்த சேவைகள் சுற்றறிக்கை கடிதம் : 01/2024

எனது இலக்கம் : PA/CS/POLICY/ பொது

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

சுதந்திர சதுக்கம்,

கொழும்பு 07.

2024.01.23

அமைச்சின் செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

மாவட்ட செயலாளர்கள்

**<u>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களை வினைத்திறன்காண் தடைதாண்டலில் இருந்து விடுவிப்பது தொடர்பான கற்கைநெறி தொடர்பானது</u>**

இலக்கம் 1840/34 ஐக் கொண்ட 11.12.2013 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பின்படி, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் உத்தியோகத்தர்கள் தரம் I க்கு நியமனம் பெற்ற திகதியில் இருந்து 05 வருடங்களுக்குள் அந்த தரம் தொடர்பான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டியுள்ளது.

02. இதன்படி, ஏற்கனவே தரம் I இல் 05 வருட சேவையை பூர்த்தி செய்திருந்தபோதும் தரம் I இற்குரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையை பூர்த்தி செய்ய முடியாத காரணத்தினால் சம்பள ஏற்றத்தினை இழந்துள்ள உத்தியோகத்தர்களுக்கு இணைந்த சேவைகள் சுற்றறிக்கைக் கடிதம் 01/2022 மூலம் 31.12.2022 ஆம் திகதி வரை

வழங்கப்பட்டிருந்த சலுகைக் காலத்தினை 31.12.2022, ஆம் திகதி வரை நீட்டிப்பதற்கு. பொதுச்சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரது இலக்கம் PSC/APP/4/62/2018 மற்றும் 11.01.2024 ஆம் திகதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதாக இத்தால் அறிவிக்கிறேன்.

03. மேலும், 31.12.2023 ஆம் திகதி மற்றும் 31.12.2024 ஆம் திகதிகளில் தரம் I இல் 05 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்யும் உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை அளித்து மேற்படி பயிற்சித் திட்டத்தை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்